www.padippakam.com

காலாண்டு குவியல்

ஏப்ரல் 2002

விலை 50/-

படிப்பகம்

www.padippakam.com

கல்முனையில் கிடைக்குமிடம்:

MILLENNIUM
FURNITURE CENTRE
187 MAIN STREET
KALMUNAI
TEL:067-29077

அக்கரைப்பற்றில் கிடைக்குமிடம்:

APPOLLO
PHARMACY
MAIN STREET
AKKARAIPATTU

ஏக விநியோகஸ்தர்கள் :

**MILLENIUM BOOK LAND**

**MOONRAVATHU MANITHAN PUBLICATION**

465,1/1A Gall Road, Colombo-03
Sri Lanka-Tel-01-589606,077-389127
E-Mail:3man@sltnet.lk, Tel:01-302759(R)

படிப்பகம்

www.padippakam.com



# ஆசையாக ஆறேழு வரிகள் மட்டும்

எதையும் சாதாரணமாகப் பேசுவதைவிட கவிதை மொழியில் பேசுவதுதான் சிறப்பு என்று கருதுபவர்கள் நாம். வாழ்கையின் எந்த அம்சத்திலும் கவித்துவம் இருக்க வேண்டும். அது இல்லாமல் போனதுதான் இந்தக் காலச் சீரழிவுக்குக் காரணம் என்று நம்புகிறோம். கவிதைப் பாஷையில் பேசுகின்றபோது பல ஆபத்துக்களும் இருக்கத்தான் செய்கின்றன. நாம் ஒன்று பேச அது பிறருக்கு வேறொன்றாய் புரிய சங்கடங்களும் சமாளிப்புகளும் ஏற்பட்டு விடுகின்றன.

அதற்காக;

இருப்பு - 3 தொடங்காமல் இருக்க முடியாதே. சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு இது மீண்டும் தொடங்குகிறது. ஆக, இது தொடர்ந்து இனி வெளிவர வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. இப்போதைக்கு காலாண்டுக்கொரு தடவை என வைத்துக் கொண்டாலும் அதிக காலம் எடுக்காமல் வந்து கொண்டே இருக்க வேண்டுமென்பதில் ஆர்வமாய் உள்ளோம்.

இந்த இதழில் நாங்கள் இருவருமே எழுதுகின்றோம். ஒரு அதிதி எழுத்தாளனும் இல்லை. அடுத்த இதழில் நீங்கள் அனுப்பிவைக்கும் படைப்புக்களில் இருந்து அவன் தெரிவு செய்யப்படலாம். இல்லாமலும் போகலாம். இருப்பின் மாயமே அதுதான். எதற்கும் அலட்டிக் கொள்வதுமில்லை. அவசரப்படுவதும் குறைவு. ஆனால், இருப்பைப் பேணிக் கொள்ள கடுமையாக உழைக்க வேண்டுமென்பதை உணர்ந்திருக்கிறோம். அடிப்படை மனித ஒழுக்கம்கூட இல்லாமல் வாழுகின்ற ஒருவனால் படைக்கப்படும் அமரத்துவமான படைப்பு என்று பிறர் கருதும் படைப்புக்களைக்கூட நாங்கள் கவனத்தில் எடுப்பதில்லை. படைப்பை விட சுத்தமாக படைப்பாளி இருக்க வேண்டும் என்பதில் பெரு விருப்பம் கொண்டவர்கள் நாங்கள். ஒழுக்கமில்லாதவர்கள் ஓரங்கட்டப்பட்டு, சமூகம் மதிக்கின்ற நல்ல நெறி பிறழாத படைப்பாளிகள் உருவாகவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். அப்போதுதான், சாதனைகள் எதையும் செய்ய முடியாமல் போனாலும், இந்த மண்ணைக் கரைசேர்க்கின்ற எதையாவது வெளிக்கொணர முடியும். ஒருவன் படைப்பாளியாக வளருகின்ற அதேசமயத்தில் நாணயமுள்ள ஒழுக்கசீலனாகவும் வேர்விட இருப்பு பணியாற்ற விரும்புகிறது. சாக்கடைக் காற்றில் சந்தனம் கலந்திருந்தாலும் அது நமக்கெதற்கு. நோய் இருக்கும்.

தொடர்புகளுக்கு:

" IRUPPU "
79, MOSQUE LANE.
KALMUNAIKUDY - 09 (E.p)
KALMUNAI.
SRI LANKA

படிப்பகம்

www.padippakam.com



# முற்றுப் புள்ளி

ஒரு முற்றுப்புள்ளி முழுமையானது. எத்தகைய தொடக்கத்தினதும் அடிப்படை அது மௌனமானது. ஆனாலும் ஆழமானது. முற்றுப்புள்ளியின் சேர்க்கைதான் இந்தப் பொருள்கள். முற்றுப்புள்ளியின் கரைசல் துகள்தானே காற்று.

மனக்குகையின் நினைவு மண்டிகள் முற்றுப் புள்ளிகளாகத்தான் கிடக்கின்றன.

உற்றுக் கவனியுங்கள். ஒவ்வொரு முற்றுப் புள்ளிகளிலும் உயிர்கள் ஒளிர்கின்றன. முற்றுப் புள்ளிகள் அசையும்போது எறும்புகள் என்கின்றோம். நீண்ட முற்றுப்புள்ளிகளை பூரான், பாம்புகள் என்கின்றோம்.

காலில் கிடக்கும் செருப்பைப் பாருங்கள். முற்றுப்புள்ளிகளின் சேர்க்கை. எதையும் பாருங்கள்: முற்றுப்புள்ளிகளின் சேர்க்கை. ஆனால் முற்றுப்புள்ளிகள் உயிர் உள்ளவை என்பதுதான் முக்கியம்.

உற்றுக் கவனித்தால் தெரியும். முற்றுப் புள்ளிகள் உம்மென்று இருந்தாலும் கவலையுடன் இருப்பதில்லை. இடைக்கிடை கர்வப்படுவதும் இல்லை. இருந்து விட்டுப் போகும் முற்றுப் புள்ளிகள் என்று ஏளனமாய் எண்ணிவிடாதீர்கள்.

அசையாத முற்றுப்புள்ளிகள் அர்த்தம் நிறைந்தவை. அவைகள் தவத்தில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்றையே நினைத்துக் கொண்டிருக்கின்றன. எதையும் உண்பதில்லை. எதையும் உடுப்பதில்லை.

எனக்கு முற்றுப்புள்ளிகளைப் பார்க்கும்போது வெட்கமாக இருக்கின்றது. பொறாமையாகவும் இருக்கின்றது.

எச்.எம்.பாறூக்

www.padippakam.com



# மீண்டும் வாலைச் சுருட்டி எழும்புதல்

சிதைந்து போன தடங்கள்
நின்றுவிட்ட ஒற்றையடிப் பாதை
எப்படி எவ்வழி என்று
குழம்பிப் போன ஒருவன்

மரங்களோடு கதை பேசினான்
மண்ணின் நெஞ்சில் காது வைத்து
என்ன நினைக்கிறது என
உற்றுக் கேட்டான்

மண் அவனை அறிந்து சொன்னது
மடையா
மரம் சொன்னது
மக்கு

உளவு பிடிபட்டது
நாணத்தில் குழைந்தான்
பின்
காய்ந்த சருகுகளின் மேல்
சுற்றுக் கண்ணயர்ந்தான்

கட்டெறும்பு
கடித்துக் குதறியது
துடிதுடித்து எழுந்தான்

எச்.எம்.பாறூக்

www.padippakam.com



# இதயம் கழுவுதல்

காலமாவதற்கு முன்
காலத்துள் மறைந்து பின் எழுந்து பார்
மேகத்துள் மறைந்து நிலவு
வெளிப்படுவது போல.

மேகத்துள் மறைந்த நிலவு
ஆடைகளைந்து குளிப்பாடை கட்டி
ஊத்தை தேய்த்துக் குளித்து
தன்னை முறுக்கிப் பிழிந்து
பின் எழும் நிலவைப் பார்.

என்ன புதுமை
உற்றுப் பார்
மனம் பளிங்கு.

பாவங்கள் போய் பளிங்கான நிலவின்
உள்ளத்தின் விம்மலை ஒரு தரம் உற்றுக் கேள்.

அதைப் போல
நீ ஒரு தரம் உருகு
காலத்துள் சற்று மறைந்து போ.

கானல் நீர் தேடி நடந்ததை நினைத்துப் பார்
காற்று வாங்கப் போய் கடலில் விழுந்ததை நினைத்துப் பார்
நெஞ்சுக் குதறலில் நெருப்பெடுத்து நீ நடந்ததை
நினைத்துப் பார்.

நீ ஒரு தரம் உருகு
சுத்தமாகு
காலத்துள் மறைந்து பார்
பின் வா.

எச்.எம்.பாறூக்

படிப்பகம்

www.padippakam.com



# இல்லாமல் ஆகுதல்

காகம்
அவசர அவசரமாகக் கத்தியது
குருவி
விட்டுவிட்டு கத்திக் கொண்டே இருக்கின்றது
உழவு இயந்திரம்
உறுமிக் கொண்டிருக்கின்றது
அவள் குளிக்கும் சத்தம்
என் உடம்பில் சில்லிடுகின்றது.

"மீனே" என்று தெருவில் கூறினான் ஒருவன்.

எனது கண்கள் அகலத் திறந்துள்ளன
எனது காதுகள் விரிந்துள்ளன
நெஞ்சு துணுக்கிடுகிறது.

இன்னும் நான் இருக்கிறேன்
என்னும் உணர்வு குத்திடுகிறது
இனி நான் இல்லாத உலகிலும்
இப்படி இப்படி.

காகம் கத்தல் ....
குருவி விக்கல் ....
உழவு இயந்திர உறுமல் ....

சற்றுக் கண்ணை மூடுகிறேன்
நெஞ்சு கரைந்து போகின்றது

எச்.எம்.பாறூக்

www.padippakam.com



# காற்றில் விதைத்தல்

என் கனவுகளை
காற்றில் விதைத்தேன்
நாற்றுகளைப் பிடுங்கி
மேகத்தில் நட்டேன்
என்
கண்ணீர் ஊற்றுக்களால்
ஒரு மாயைப் பயிர் வளர்த்தேன்.

முள்ளுகளாய்ப் பூக்கும்
முள்ளுகளாய்க் காய்க்கும்
முள்ளுகளாய்ப் பழுக்கும்.

முள்ளுப் பழத்தை
தினமும் உண்கிறேன்
சொல்ல ஒணா வெறுப்புச் சுவையை
விரும்பி விரும்பி
முள்ளுப் பழத்தை உண்கிறேன்.

மீண்டும்
என் கனவுகளை
காற்றில் விதைப்பேன்.

எச்.எம்.பாறூக்

# உள் தோண்டல்

நிழலாடும் பூமி
என் நிழல் என்னோடு ஆடும்
ஓடும்
பள்ளத்தில் மேட்டில் பளிங்குத் தரையில்
என்னோடு கூட வரும்.
என்னைப் போல் எகிறிக் குதிக்கும்
பின்
என்னோடு என் நிழல் நிலமாகிப் போகும்.

களியாகி உடலாகி கவின் உயிர்
கலந்துரையாடி
அழகான கூடு அருமந்த ஆவி
வெறியான உணர்வு வெல்லம் கனி
சுவைதேடி நுங்கு குலை பறித்து
பசியாறிக் கிடந்து

படிப்பகம்

www.padippakam.com



குரூரம் கொலை கொடிய பேராசை
போராட்ட வெறியில்
மண்ணோடு பொன்னோடு அதிகாரக் கோல் தேடி
புணரும்
களியோட்டின் குணம்.

பால் நிலவின் பருகல்
பகலவனின் கதிர் ஞானம்
பிடிச் சோறு முடிந்தால் தொடர் பயணம்
பயம், பாதாளம், ஆகாயம்
ஒரு சாண் அப்பால் இப்பகலவனின் கீழ்
அணியணியாய் நிற்கையில்
வலக்கையில் கிடைத்தால் பட்டோலை
வரவேற்பு
இடக்கையில் கிடைத்தால் ஏமாற்றம்
என்றில்
நன்மைகள் பல செய்யும்
உயிர்ப்பளிங்கும் அதன் குணமும்.

களியும் உயிரும்
எது வெல்லும்
களிவென்ற காட்டு மனிதனா
உயிர் வென்ற உத்தமனா
அதுவா இதுவா
முரண்பாட்டின் முனைவில் பிறக்கும்
என்பாடு.

சிரி என்றபோது சிரித்தேன்
சினம் வந்தபோது சினந்தேன்
இப்போது
கை தவறி உடைந்து போனது பால் கிண்ணம்
குடித்தது பாதி
கண்களைத் துடைக்கச் சொல்கிறார்கள்
எதுவாயினும்
கள்ளிப் பற்றைக்குள் கண்டெடுத்த
பொன் புதையல்
வீசியெறிந்துவிட்டு வீதி வழியே நடக்கின்றேன்.

ஆலமர நிழலில் அமர்ந்து களைப்பாறி
ஊர்க்கோலக் குப்பைகளைக் களைகின்றேன்
சருகுதிர்க்கும் ஆல் போல.

சாந்தி விளக்கை ஏந்தி நான் நடக்கிறேன்
வெல்லும் குணங்கொண்டு நடந்தவர்கள் வழியே
என்னோடு நிழலும் நிலமாகிப் போன பின்பும்.

எச்.எம்.பாறூக்

படிப்பகம்

www.padippakam.com



# மேலாண்மைக் கோடுகள்

தலையைச் சொறிவதை விட்டுவிடு
தலை புழுத்தால் பேன் பாரு
வெள்ளிகளை எண்ணுவதை விட்டுவிடு
விரல் விறைத்தால்
நெட்டி முறி.

மூளை குடைந்து
நெடு மூச்சு விட்டு
கட்டாந் தரையில்
கைகளால் செலுத்திய கப்பல்
கவிழ்ந்து போன போது ...

தலையைச் சொறிவதை விட்டு விட்டேன்.

எனை மூடி
எழுந்த புற்றுக்குள்
எத்தனை பாம்புகள் வாழும்
என்பதையும் மறந்துவிட்டேன்.

இனி
நெஞ்சு நடுக்கமில்லை
அதற்காக நிமிர்ந்து நடக்கவும் தேவையில்லை
மண் புழுவுக்கும்
மனிதப் புழுவுக்கும்
இனி அஞ்சத் தேவையில்லை தான்.

சூரியன் உள்ளதால் தானா
சூரியன் என்று எழுதித் தொலைத்தேன்
என் நினைப்பு சூரியனை உருவாக்குமா
அதையும் எள்ளிச் சிரிப்பேன்.

விதியின் ஆளுகைக்குள் விழுந்துவிடு
ஆற்று ஓட்டத்தில் ஓடிவிடு
மெல்ல நினை
இருள் விலக நீ கேள்
இதய ஒளி எங்கும் பரவி நீயாகி ...

www.padippakam.com



இற்றுப் போன நேற்று
எதுவுமிலா இன்று
நெருப்பு ஆறு ஓடிவர
நிலம் பிழந்து உனை விழுங்க
கடல் வந்து உனை மூட
எதைப் பற்றிக் கவலை

கூரான கத்திக்கும்
அறுக்கும் ஆற்றல் இல்லையென்றால்
இந்தக் கொடூரங்களின் ஆவி எது

மண்ணை நினைத்து
மண்ணுக்காய் போராட்டம்
ஒரு பெண்ணை நினைத்து
பெண்ணுக்காய் போராட்டம்
ஒரு பள்ளிக்காய் ஒரு கோயிலுக்காய்

இரத்த ஆறு எங்கும்
எவ்வாறு காண் ஊற்றெடுக்கும்

நெருப்புப் பிள்ளைகள்
எங்கும் கருக்கொள்ளும்
நரகக் கொள்ளிகள் இன்னும் உருவாகும்

வழிகாட்டல் அவன் கை உள்ளது.

மெல்ல நினை
இருள் விலக நீ கேள்
இதய ஒளி எங்கும் பரவி நீயாகி
கவலை விடு
கால் நீட்டிப் போடு

தலையை சொறிவதை விட்டுவிடு
தலை புழுத்தால் பேன் பாரு
வெள்ளிகளை எண்ணுவதை விட்டுவிடு
விரல் விறைத்தால்
நெட்டி முறி
அவ்வளவுதான்

எச்.எம்.பாறூக்

www.padippakam.com



# ஒரு பொருத்தப்பாட்டு ஒப்புதல்

இன்னும் இருக்கிறது என்னுடைய அசிங்கத்தனம். கையில் ஊசியும் நூலும் எப்போதும் கொண்டு திரிய வேண்டும் என் வாயை தைப்பதற்கு. சிறுசிறு கர்வம் தலைதூக்குகிறது. அற்பத்தனம் என்னிடம் படம் எடுத்து ஆடுகின்றது.

என் எஜமானனே! என் கேவல நிலையை நீ நன்கு அறிவாய். என் நெஞ்சு துணுக்குறுகிறது. கிருபையாளனே எத்தனை தரம் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

அதற்குள் ஆத்திரம் வருகின்றது. என்ன விசர்த்தனம் . எங்கிருந்து எங்கு பாய இந்த ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றேன்.

மனம் சுழல்கிறது. நிமிடத்திற்கு நிமிடம் எண்ணத்தில் கறள் படிகிறது. என்னால் ஒன்றும் செய்ய உத்தரவு இல்லை என்பதாய் என்னை நான் பட்டமாய்விட்டு காற்றில் பறக்க விட்டேன்.

என் கயிறு உன்னிடம்தான் என்று திடமாக நம்புகின்றேன். நீ என்னைச் சுண்டி சுண்டி இழுக்கிறாய். என் மேல் கிழிந்து விட்டது. என் இதயத்தில் காற்றுவாசம் செய்கின்றது.

இடைக்கிடை கொஞ்சம் ஆசை வருகிறது. பின் அடியோடு சாய்ந்து விடுகின்றது.

மூச்சுவிட முடிந்த பொழுதெல்லாம் உன்னை நினைக்கின்றேன். இருந்தும் இந்த அற்பத்தனம் எங்கிருந்து எனக்குள் முளைக்கின்றது.

என் நெஞ்சு கழன்று நிலத்தில் கண்ணாடியாய் விழுகிறது. சில துண்டுகளாய்ச் சிதறுகின்றன. நெஞ்சு இல்லாமல் நான் எப்படி வெளியில் செல்வது? யாரும் பார்த்து கொள்ளக் கூடியதாகத் தானே என் நெஞ்சு இருக்கிறது.

இனி நான் எப்படி வெளியில் செல்வேன். மனிதர்களின் முகத்தில் நான் எப்படி விழிப்பேன். புதிய நெஞ்சை எங்கு போய் பொருத்திக் கொள்வேன். இனி கண்ணாடியால் என் நெஞ்சத்தைப் பொருத்தக் கூடாது. பிளாஸ்டிக்கில் எல்லாம் வந்து விட்டது. இனி பிளாஸ்டிக்கில் பொருத்தலாம் என்றால் அதற்கும் மனம் இடந்தரவில்லையே.

மலர்களினால் என் நெஞ்சைப் பொருத்தலாம் என்றால் என்ன சுகமாக இருக்கும். மலர் நெஞ்சன் என்று புனைபெயர் கூட வைத்துக்கொள்ளலாம். ஆனால், மலர்கள் வாடிப்போகுமே. வாட வாட நெஞ்சை அடிக்கடி மாற்றுவதா? இதுதான் என் வேலை என்ற படியாய் போய்விடுமே.

கல்லில் நெஞ்சைப் பொருத்திக் கொண்டு செல்வதில் கஷ்டமில்லைதான். அதிகமானவர்கள் அப்படித்தான் செய்கின்றார்கள். எல்லோரையும் போல செய்து விட்டால் என்ன என்றால் அதற்கும் முடியவில்லையே. இந்த முண்டுக் கல் நெஞ்சை எப்படி தூக்கிக் கொண்டு திரிவது?

இப்படித்தான் எனக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள். இதுவா அதுவா ... அதுவா இதுவா ... என்பதில் தலையிடிக்கின்றது. இரண்டு தரம் குலுக்கினால் இனி மூளையும் கீழே விழுந்து விடும் போலிருக்கின்றது.

மூளை கீழே விழுந்தால் உடையாது. என்றாலும் மண்ணில் விழுந்து மண் ஒட்டிக் கொண்டது. என்றால்தான் பிறகு பிரச்சினை. தலையிடிவருவதில் பிரச்சினை ஒன்றுமில்லை. ஆனால் மூளை கீழே விழுந்துவிடுவதில் தான் பிரச்சினையே இருக்கின்றது. முன்னர் இரண்டொரு தரம் மூளை விழுந்து நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். அதிலுள்ள மண்ணைக் கழட்டிக் கொள்வது எவ்வளவு. சிரமம் தெரியுமா? இதனால்தான் என்னவோ இப்பொழுதெல்லாம் மூளை குறைவாகத்தான் வேலை செய்கின்றது. மடத்தனமாகத்தான் சிந்தனை பிறக்கின்றது.

எச்.எம்.பாறூக்



படிப்பகம்

www.padippakam.com



INTER LIVING

# Millennium

Furniture Centre

187, Main Street
Kalmunai.
Tel : 067-29077

**Upholstered Sofa Sets**

**Carpets**

**Curtaining**

**Vertical Blinds**

**Venetian Blinds**

**Wall Paper and Cloths**

**Office Furnitures**

படிப்பகம்

www.padippakam.com



# aiimas

# All India Institute of Management Studies

## Correspondence Education
(தபால் மூலம்)

**டிப்ளோமா கற்கை நெறி**
**(தபால் மூலம்)**

*All India Institute of Management Studies*

- மனித வள அபிவிருத்தியில் டிப்ளோமா
  ***Diploma in Human Resources Development***
  (ஆறு மாத காலம்)
- கல்வி முகாமைத்துவத்தில் டிப்ளோமா
  ***Diploma in Educational Manegment***
  (ஆறு மாத காலம்)

இலங்கை முழுவதிலும் ஆயிரக்கணக்கானவர்கள் தபால் மூலம் படித்துச் சான்றிதழைப் பெற்ற இக்கற்கை நெறியின் மேலதிக விபரங்களைப் பெற சுய முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டிய நீளமான உறையை எமக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கும் : விபரங்களுக்கும்:

*COURSE CO - ORDINATOR*
*24,1ST FLOOR, SUPER MARKET COMPLEX,*
*MAIN STREET, SAINTHAMARUTHU - 07.*
*INTERNET : www.AIIMAS.com.*

படிப்பகம்

www.padippakam.com



கடதாசிப் பொடிச்சி காதலிக்கக்கூடாதா ? கல்லு இளைஞன் முத்தமிடல் குற்றமா ? அந்த அமைப்பு இன்றில்லை தம்பி! அரிவாள்மனையும் மீனும் காதலிக்கும் ஒரு நாகரீக யுகமென்று சொல்லப் பெருமை வரும்போது, சிலசிலவற்றை மறந்தும் மறைத்தும் மனம் அவஸ்த்தைப்படுகிறது, நெஞ்சக் குழிக்குள் கிடந்து பனங்கொட்டைமாதிரி. எடுத்து நடு. ஒரு கிழங்கு இறங்கும். உருட்டி உருட்டிப் பார்க்கலாம். கை தேய்ந்தாலும், கற்பனை பண்ண ஓர் ஆயுதம் கிடைத்த விதமாக இருக்குமே! சிலநேரம் நீ கவிஞன் ஆகா விட்டாலும், நாலு வரி கிறுக்கி அரசியல் மேடையில் புலம்பி எதையாவது பெறலாமே! கவிஞர் "குங்குமம்" சும்மா விடுவாரா ? கை மாறு செய்யாமல்.

# கடதாசிப் பொடிச்சியும் கல்லு இளைஞனும்

விடிந்து எழும்பினால்
வாசல்
கூட்டலும் பெருக்கலும்தான்
நேற்றுவரை பெய்திருந்த
இடி முழக்க மழையில் மனம்
ஊறிக் கிடந்த கடதாசி
இன்று
புது வெயிலின் கரம்
தன் முகத்தில் பொட்டுவைக்க
உஷாராகிப் பறந்து கிடக்கிறது

பாவம்
கூட்டி எரிக்காதே
நரகம் நமக்குண்டு
நாக்கை
நீட்டியபடி

சின்னக் கல்லும்
அந்தக் கிழிந்த தாள் துண்டும்
கொள்ளும் காதலினைப் பார்த்தாயா
அது அன்பு
இந்த
உலகத்தின் ஆணிவேர்

இன்று நமது
வளவுக்குள் இன்னுமொன்றாய்
ஒன்று நம்முடைய
ஓடும்போது தீப்பெட்டி

கோமாளி ராகத்தில்
பாடுவது அநியாயம்

தொடவேண்டாம்

www.padippakam.com



அந்த
இருவரையும் பிரித்து
கடதாசி என்றெண்ணிக்
கொளுத்தி
நீயும் எரியாமல்

ரசி அவர்கள் காதலுக்கு
நம் வாசல் களமாகி
கடதாசிப் பொடிச்சிக்கும் கல்லு இளைஞனுக்கும்
உண்டான காதலுக்கு
டும் டும் டும் டும்
நான் கொட்டும்போது
நீயும் வந்து பூத்தட்டு ஏந்து
அழகான பால் முகத்தில்

சோலைக்கிளி

காற்றைப் பலவிதமாகப் பார்த்திருக்கிறேன். இந்தமுறை எம்பியாக்கி மகிழ்ந்திருக்கிறேன். யார் யாரையெல்லாமோ எம்பியாக்கி மகிழ்ந்து பார்க்கின்ற இந்தக் காலத்தில், காற்றை எம்பியாக்கிப்பார்ப்பது ஒன்றும் இழக்காரமான செயல் அல்லவே! காற்றுக்கு பூக்களில் எழுதத்தெரியும். பெரிதாக பேசத்தெரியாது விட்டாலும் புறுபுறுக்கும் அளவுக்காவது நாக்கு திருந்தியிருக்கிறது. மர இலைகளுக்கு பேன் பார்க்கவும், என் தலையில் மட்டுமல்ல, உங்கள் தலைகளிலும் ஏறி நின்று குழப்பிக் குதித்து தேகப்பயிற்சி செய்வதற்கு அறிவுண்டு. ஒரு போதும் சோம்பல் இல்லாதது காற்று. வெளியூர் போய் மாதக்கணக்காக மறையத் தெரியாது புத்திசாலித்தனமாக என் ஜன்னலைத்திறக்கும். எம்பிக்கு முக்கியம் அதுதானே! எந்த தோரணம் கட்டியும் அதனை வரவேற்கத் தேவையில்லை. அது மக்களோடு மக்களாக கலந்து கிடப்பது. காற்று ஓலைகளுக்கு "சல்யூட்" அடிப்பதில்லை. ஓலைகளுக்குத் தெரியும் காற்றின் தகுதிகள். அவைகளே அதைக்கண்டு எழுந்து நிற்கும். சொற்பநாள் பிரிந்திருந்த தென்றலே! உனக்கு நான் ஏசிப்பார்க்கிறேன்.

## மாண்புமிகு தம்பியே தென்றலே

எட்டிப் பார்க்கத் தேவையில்லை
உள்ளே வரலாம்
மின்விசிறி
மந்திரி உறங்குகிறார்
என் படுக்கையறை வாடிவீட்டில்
தொகுதி எம்பியே பூந் தென்றலே நீங்கள்
உள்ளே வாருங்கள்

உங்கள் தொகுதிதானே
என்னுடைய வீடு
ஜன்னல்கள் உங்களது பணிமனைகள்
கட்சி அமைப்பாளன் கதவு

என்ன நினைவில் இல்லையா

பொதுமக்கள் பணத்தில் வெளிநாட்டுப் பயணமென்றால்
நல்ல சொகுசுதான்

படிப்பகம்

www.padippakam.com



தன்னையும் மறப்பீர்கள் கிழிந்த தாவணிக்குள் கள்ள வாக்குச்
சீட்டுக் கொண்டுவந்து போட்டு வெல்லவைத்த
பொடிச்சியும் நினைவிரியாள்

மாண்புமிகு தம்பியே
தன் தலைக்குள் இரும்புள்ள
மந்திரியின் பேச்செல்லாம்
வெறும் உளறல்
ஊத்தை
குளிரே இல்லை
அவர்
தேர்தலிலே தோற்று
பின் ஏதோ பட்டியலில்
அமைச்சர் ஆன குணம்

நிறைய இருக்கிறது
அவர் நெஞ்செல்லாம் தூசு

## சோலைக்கிளி

கடவுக்கு வெறுத்துவிட்டது. தன்மீது தோணிவிட்டு தோணிக்குள் மது அருந்தும் குரங்குகளால். ஊருக்குள் பொருள் திருடி பிழைத்த கள்ளன் இப்பொழுது வலை திருட என்று தனக்குள் வருதல் கண்டும். சீறியது. ஏசியது. மாரி வர இந்த ஊர் வந்து ஒரு பாடம் புகட்ட நினைத்து ~

வந்தது. வந்தது. பானையைக் கழுகி தன் வேலிக் "கருக்கினிலே" கொளுக. ஊர்ப்பானை கடல் வேலிக் கம்பினிலே தொங்கிக் கிடக்கின்ற ஒரு மாரி, பெய்யும் இடத்தில் பெய்யவில்லை. பெய்திருந்தால் மின்சாரம் கழுத்தறுத்துப் போய்வருமா? மழைக்கும் "இடும்பு" என் மகன் போல. குந்து என்று நான் சொல்லும் இடத்தில் குழிக்காமல், நீ கால் தட்டும் படியில் விடுகின்றான். மழைக்குப் பழக்கியது அவனா? இல்லை அவனுக்குப் பழக்கியது மழையா! ஆனைக் கடல் பானை கழுக வாங்கிய சவர்க்காரம் என்ன விலை? விலை கேட்கும் அளவுக்கே இங்கு அனைத்தும். என்னையும், எனது கவிதையையும் தவிர என்று யாரும் கருதிக்கொண்டாலும், உண்மை எப்போதும் ஒளித்துத்தானே சீவிக்கும் சமாதான ஒப்பந்தங்கள்போல.

# மீன்குஞ்சு புள்ளி குத்தும் மருதோன்றி

மாரிக் கடல்
ஊருக்குள் நுழைய முனைகிறது

இந்த
வேலி இல்லாத
ஊர் மிகவும் அழகுதான்
ஆனால்
உள்ளே வந்து பார்த்தால்தான்
தெரியும்
பானைக்குள் இருக்கின்ற
அழுக்கு

www.padippakam.com



கடல்
குவக்கிக் கழுக
எடுத்து வரும் சவர்க்காரம்
கை தவறி விழுந்ததுவோ
அலையில்
எங்கும் நுரை
அப்படிக் கழுகினால்
சோறு சமைப்பது
யாராம்

கடலே
நாய் இருந்து நீருக்குள்
குரைக்கின்ற ஒலி எழுப்பும்
மாரிக்குள்
இரவு வந்தாலும் ஊர் பார்க்க வேண்டுமென்றா
மின்கம்பம் நாட்டுகிறாய் அலையை

அதன் தொங்கலிலே வானம்
பட்டுக் கசிகிறது
நீ சீறும் சீற்றத்தில்
இன்னும் கொஞ்சம்
அது இழகிப் போனால்

வந்து விழும் ஒரு பெரிய ரொட்டியாய் ஆகாயம்
நீ தொப்பியாய் அணிவாய் போவாய் உனக்கென்ன
நாங்கள்தான் மருதோன்றி
உன் மீன் குஞ்சு பெருநாள் கொண்டாடி புள்ளி குத்த

## சோலைக்கிளி

நாம் நினைப்பது சுவருக்கும் கதவுக்கும் ஒன்றுமில்லை என்றுதான். குறைந்தது உணர்வாவது இருக்குமே என்று கருதுவதில்லை. அதற்குக் காரணம் நமக்கு உணர்வு குறைவாக இருப்பதுதான். இந்த உணர்வு குறைந்த தனங்கள்தானே இன்று உலகத்தைச் சீரழித்திருக்கின்றது. ஒருவன்மீது ஒருவன், ஒரு சமூகத்தின்மீது இன்னொருசமூகம், ஒரு நாட்டின்மீது இன்னொருநாடு, உணர்வுரீதியாக அணுகி வாழுகின்ற முறை இருக்குமென்றால், அதை மதிக்கின்ற குணம் வளருமென்றால், நாம் இப்படி இருக்கத் தேவையில்லை. வானத்தில் தங்கம் எடுக்கத் தொடங்கியிருப்போம். களிமண்ணில் வெட்டிய செங்கட்டிகளால் வீடு கட்டாமல், நிலாப் பிசைந்து மாளிகைகள் எழுப்பியிருப்போம். இன்று ஆடைகட்டிய சுறாவாக, திமிங்கிலமாக, வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் வீட்டுக்குள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூட ஜடப்பொருள்கள் கவனிக்கத் தொடங்கியிருக்கின்றன. மரத்தை நாம் மரமாகவே நினைத்து நாம் மரமாகிப் போனோம். அதாவது பேசக்கூடிய மனிதன் பேச்சுப்பிழைத்தான். பேசத்தெரியாத கதவு பேசப்பழகியது. உதாரணமா ~

## வீடல்ல

வீரென்று அழுதான்
கை விரல் ஒடு கதவுக்குள்
பட்டு உடைய என் மனக்கூரை
வழியாக இரத்தமழை ஒழுக

படிப்பகம்

www.padippakam.com



என் பாத்திரத்துள் வெள்ளம்
அது சிகப்புத் தண்ணீர்
ஓட்டை பார்த்து எடுத்துவைக்க
நிலத்தில் இருந்து
ஒற்றி எங்கேனும் பிழிய

நீ சாக்காக மாட்டாயா
கொச்சிக்காய் அடையாத
புதுக் கோணி
பழங்கள் கொள்ளுவது

ஒரு பிள்ளை பெறாமல் வளர்ப்பு மகன்
ஜன்னலையே கக்கத்தில்
தூக்கி வைத்து ஊருக்கு

காட்டுகின்ற கதவுக்குப் பாசமுண்டா
என் பிள்ளை துடிக்கிறது

நீ எப்போதும் சாய்வுக்
கதிரையிலே இருந்து
புத்தகத்தைப் பார்த்தபடி
அவளோ~ சமைப்பதுவும்
தொழில் பணிகள் செய்வதுமாய்
நேரங்கள் கழிய

உன் வீடு ஒரு வரண்ட
குளமாகிப் போக
அதில் நீர் தேடி மேய்கின்ற
மான் குட்டி உன் பிள்ளை
பாவமென்று கையைத்தான் நக்கினேன்
கடிக்கவில்லை என்கிறதா
தென்றலுக்கு அசைகிறதே
கிறுக்கு

சோலைக்கிளி

www.padippakam.com



நிலாக் காலம் எவ்வளவு இனிமையானது. நீயும் நானும் பழகிப் பிரிந்த அந்த நாட்களை விடவும், பெரிய சுகமானது. மஞ்சல் நிலா ஒழுகும் காலத்தில் ஆகாயம் கர்வப்படுவதைபோல, கறள் ஆணிக்கும் பருவம் வருகிறதோ!

பருவம் வந்தால் ஏதேதோவெல்லாம் செய்யச் சொல்லும் நீங்கள் மதில் ஏறிக் குதித்த கதைகள் நினைவுக்கும் வந்து போகும் அதைப் பிறகு கேட்டுப்பார்க்கலாம். அதிகம் பேர் ஊர்திருத்திகளாக, அல்லது, நடந்தால் புல் சாகாப் பிறவிகளாக மாறியிருக்கலாம். அதைவிடு!

குறைந்தது முகப்பரு உண்டாகி மூக்கில் ஓட்டைபோடும். அல்லது கன்னத்தைக் கட்டியாக்கும். இப்படிப்பட்ட மனிதர்கள் பிற்காலத்தில் பெரிய புள்ளிகளாகியும் விடுகின்றனர், அவர்களின் கனைப்பும் ஒரு மாதிரியாக இருக்கும். பெரிய மனிதர்கள்தானே அவர்கள்!

இவர்களுக்கு கன்னக்கட்டிகளும், மூக்குத்துவாரங்களும் தகுதிகளாகியும் விடுகின்றன. உலகமே! உனது மாயம்தான் என்ன! காலமே உனது கோலம் அலங்கோலமுமா? சில நேரம் இந்தக் கறள் ஆணிக்கும் அருள் பாலித்து......

# கால்த் தோல்க் கண்ணாடி

இரவை
நிலவு வடிக்கிறது
அதற்குள் இருந்த வெள்ளை
வெளிச்சமாய்
நம் வாசலில் விழுகிறது

இந்தக் குருட்டு விளக்கு கொளுத்தி இரவுள்
காத்திருந்த ஒரு துரோகி

தன் கூரை நீட்டி
என் காலில் ஏற்றி
கனகாலம்
வாய்த் தீனின்றிக் கிடந்த உதட்டில்
தொட்டுவைத்தான் சிறுதுளியாய்
என் உப்பை
இரத்தத்தை

யார் விதைத்த துரோகி இவன்
இரண்டு இலைவிட்டு
முளைக்காத மலடன்
ஆணி என்று பெயர்
சுத்தியலாம் எதிரி
அவன்

சமயம் பார்த்து
குதிகாலில் ஏற்றிவிட்டான்
தன் கூர் முகத்தை என்னுடைய
கால்த் தோலில் கண்ணாடி
பார்க்கின்ற ஆசை வர

படிப்பகம்

www.padippakam.com



## சோலைக்கிளி

முகமென்ன அழகா
இரும்பு
ஆணிக்கும் முகப்பருவா
காலம்தான்

உனக்கு கொப்பளம் உடைக்க இடமில்லையா? என் பெண்டாட்டியின் முகம்தானா தேவை? அடேய், அற்பப் பயலே! நான் யார் தெரியுமா? கவிஞன்! இரண்டு வரியை சூடாக எழுதிவிட்டு, ஆறிக் கிடக்கும் தேநீரைக் குடிக்கிறவன். உன்னை எழுதுவேன், ஒரு கோடரியால் வெட்டுதல்போல், எனது பேனையினால் குடல் எடுப்பேன். நான் யார் தெரியுமா? "இருப்பு" ஆசிரியர் இருவரில் ஒருவனும், தலை போனாலும் தமிழில் விளையாடி பிழை பாடுபவன்.

## திறப்பு

பல விளக்கை அணைத்துள்ளோம்
ஒரு விளக்கு மட்டும்தான்
பழுத்தபடி

சிறு வெளிச்சம் இரவில் மழையுமென்றால்
ஒரு சாதி எண்ணம் வருகிறது நீ வா
என் மடிக்குள்
இறங்கி உறை
உனது உறைதலில் பாகாகிப் பிசினாகி
நானும் கொஞ்சம் இனிக்க
நீ தொட்டுவைக்க நுனி நாக்கில்

அநாகரிகம் ஒருபோதும் வேரோடு கெழிவதில்லை
கனைத்துக்கூட வராமல் காற்று
அறைக்கதவைத் திறக்கிறது

உனக்குள்
உறைந்தமாதிரியும் பிசினான கட்டியுமாய்
ஒழுகி நிலமெல்லாம் நான் வழிந்து
நடந்து
கதவைச் சாத்துகிறேன் சிறுபிள்ளை வழுக்கிவிடும்
யானைக் கதவு அலற

பலகையிலும் பத்தினியா
என் கை பட்ட நடுக்கம்
அதன் ஈரவக்குள் நூல் அறுக்க

உன்னையும் நினைத்தேன் உனது மணிக் கண்ணின்
முன்னாலே தொடைதூக்கி தன் கொப்பளத்தை உடைக்கும்
நமது எதிர்வீட்டான் முகம் கறுக்கச் செய்யும்
உனது முகத்தையும் யோசித்தேன்

www.padippakam.com



# சோலைக்கிளி

உன் முகம்தான் இந்தக்
கதவுக்கும்
உனது பூட்டுப்போல் திறப்புள்ள ஒரு பூட்டும்
உனக்கு நான் திறப்பு

என்னையும் இப்படித்தான் அணைத்து அணைத்து நமது குழந்தையையும் இப்படித்தான் அணைக்க நினைத்தால், அது நசுங்கும் அல்லவா! கண்மணியே! உனக்கு அணைக்கின்ற கலை பற்றி போதிக்க இருக்கிறது. சிலர் என்னமாதிரி அணைக்கிறார்கள்! சிலர் என்னமாதிரி அணைகிறார்கள்! இன்றைக்கு ஏசுபவன் நாளைக்கு அணைகிறான். அல்லது அணைக்கப்படுகிறான் இது அணைப்பதும், அணைக்கப்படுவதுமான ஒரு காலம் இல்லையா! குறைந்தது இந்தக் குரக்கனையாவது நீ சரியாக அணையேன்! ஐயோ, பிழைக்கத் தெரியாத எனக்கு, பிழைக்கத் தெரியாத ஒருத்தியும். பிழைப்பேனா?

## குரக்கன் இடிகின்ற அணைப்பு

எனது நிலத்திலே விளைந்த நெல்லிது
இந்தக் குருத்திலே என் முகம் உள்ளது

கண்ணுக்கு அடியிலே
ஓடுகின்ற புதுக் கறுப்பு
உண்டாகும் முன்னர் நான்
தெரிந்த உருவத்தில்
உன் வீட்டுக்குள் தெறிக்கின்ற

நெல் சம்பா இல்லை
நெடியது

என் ஓலையும் நெடுப்பம்
அந்த ஓலை தாங்கிய
தாவரக் கிழங்கும் நெடுப்பம்
குழல்
பிடுங்கி எறிந்த
பிட்டுமாதிரி
துள்ளும் நெல்மணி மெத்தையில்

அமர்ந்துபோனது இரவு வந்ததா
பச்சை நெல்மணி
குளிரில் உலருதா

நல்ல நித்திரை எழுப்பும் குறட்டையில்
என் பரம்பரை வசையைச் சொல்லும்
சின்னக் குரக்கன் உன் நெஞ்சில் ஒட்டுது
இடியும்
அடியேய்
இப்படியாடி அணைப்பது

படிப்பகம்

www.padippakam.com



நான் நின்றேன் அன்றைய வானத்தில்
இந்த நட்சத்திரம் என்னைப்போல்
நிற்கிறது இன்று

~ ஒரு நவீன கவிதை

புள்ளிக்குப் போகாத எல்லாக் கள்ளக் குழந்தைகளும் கவிதைகள் எழுதினால் படிக்க ஆள் இல்லாமல் போய்விடுமே என்று, சில குத்துக்கரணக் குழந்தைகளைப் பிடித்து ஊர்த் தலைவர்களாக்கிவிட்டோம். மன்னிக்கவும்!

~ ஒரு சமுதாயத்தின் ஈனம்

# ஆள் விழுங்கும் பச்சை

ஜன்னலைத் திறந்தேன்
ஒரு வெள்ளி மட்டும் இருந்தது
பள்ளிக்குப் போகாத ஒரு கள்ளக் குழந்தை
நின்றது

அங்கே ஒரு மேக மரத்தின் கீழ்
ஏனைய குழந்தைகள் கூடி விளையாடி
பள்ளிக்கூடத்து
விளையாட்டுப் பாடத்தை

பயின்று கொண்டிருக்கும் சமயத்தில்
இந்த
வெள்ளி மட்டும்
தனித்து யோசித்து

என்னைக் கண்டு
சற்று மறுக்கி

நிலத்தைத்தான் பார்க்கிறது
பாதாளம் தெரிகிறதா

பாசி படிந்தமாதிரி
கிணறு தெரிவதால்
உண்ணவர மீன் குஞ்சுக்கு ஆசையா

www.padippakam.com



இது பொல்லாத பாசி
ஆள் விழுங்கும் பச்சை
வெள்ளிப் பூ மணியே நீ இதற்குள் விழுந்தால்
கொழுக்கமாட்டாய்
கறுப்பாய்
ஒரு சதக்காசைப் போல

பொறுக்கி எடுத்து சிறு பிள்ளையும் எறிவான்
என்னைப்போல்
நீயும் அந்தரத்தில் இருந்து நம் அழகைப்
பேணுவதே நல்லது

சோலைக்கிளி

## கடலை வாங்கும் நேரம்

அப்பாடா, குறிப்புகளும் படைப்புகளுமாக எழுதிய கை என்னை நிமிர்ந்து பார்க்கிறது. வளர்த்த பிள்ளை முகத்தைப் பார்ப்பதைபோல. சிவந்து. கரமே! உனக்கு ஆறுதல் வேண்டுமா? தருகிறேன். நான் ஏமாற்றுபவன் இல்லையே! பலரால் ஏமாற்றப்பட்டிருக்கிறேன். காசு கொடுத்து சில விடயங்களைப் படித்திருக்கிறேன். அண்மையிலும் சிலர் பாடம் எனக்குப் புகட்டி இருக்கிறார்கள்.

என்ன செய்வது மனதுக்குள் மணிப்புறா வளர்ப்பவன், அழுக்குக் குடிக்கும் கருங்காகங்களின் உலகில் மூக்கைப் பொத்திக்கொண்டுதானே திரியவேண்டும்!

இன்னும் சொன்னால், மெத்தப்படித்த மேதைகளின் மண்பந்து அல்லவா இந்த உலகம்? நம்மைப்போன்றவர்களுக்கு தினசரி வகுப்பு நடத்திக்கொண்டுதான் இருப்பார்கள். அவர்களின் நரகல் குணங்களையெல்லாம் காட்டி. சரி, உனக்கு கடலை வாங்கித் தருகிறேன். எடுத்து எனது வாய்க்குள் எறி. ஆறுதல் இருவருக்கும் ஆகட்டும்.

அடுத்த குவியலைப் படைக்க கடலைதான் எனக்குக் குளிசையா !

சோலைக்கிளி

www.padippakam.com

நீங்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதில்
நாங்கள் கவனமாக இருக்கின்றோம்

Stylish

WE TAKE CARE OF YOUR STYLISH

ஆண்களுக்கான நவநாகரீக ஆடையணிகள் மாத்திரம்
கிடைக்குமிடம்:

NO.06 REST HOUSE ROAD,
KALMUNAI
CALL: 067-20308

படிப்பகம்

www.padippakam.com

விவசாய இரசாயனப் பொருட்கள்
விலங்குகளுக்கான மருந்து வகைகள்
விதை நெல்
ஏனைய தாவர விதைகள்
உரம்
அனைத்துக்கும் கல்முனையில் பெயர் போன நிறுவனம்

அக்ரம் பாம் ஹவுஸ்

116,பிரதான வீதி
கல்முனை

தொலைபேசி: 067-29157,29257,21157

நாங்கள் தற்போது இரண்டு சக்கர உழவு இயந்திர விற்பனையிலும். ஈடுபடுகின்றோம் என்பது புதிய செய்தியல்ல.

இது தனிப்பட்ட சுற்றுக்காக இல. 79, தைக்கா ஒழுங்கை, கல்முனைக்குடி-09, கல்முனை,இலங்கை என்ற முகவரியில் வசிக்கும் சோலைக்கிளி அவர்களால் இருப்பு வட்டத்திற்காக கல்முனை WORLD WIDE DIGIT,அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

படிப்பகம்